**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 21ம் நாள்

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைக்கால மனு எண்.4/2024**

**in**

**அசல் வழக்கு எண். 79/2024**

1. N. செந்தில்பிரபு, த/பெ. நடராஜ், இந்து, வயது 46,
வசிப்பிடம் கதவு எண்.6/9, பல்லடம் மெயின் ரோடு,
செலக்கரிசல், சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

2. M. ராசு (எ) பரமகுருசாமி, த/பெ. மந்திரியப்பன், இந்து,
வயது 50, வசிப்பிடம் பங்களாத் தோட்டம்,
வேலப்பநாய்க்கன்பாளையம், சுல்தான்பேட்டை வீதி,
சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

3. S. ரங்கநாதன், த/பெ. சென்னியப்பன், இந்து, வயது 34,
வசிப்பிடம் வேலப்பநாய்க்கன்பாளையம், சுல்தான்
பேட்டை வீதி, சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

4. P. ராமசாமி, த/பெ. பழனிச்சாமி, இந்து, வயது 55,
வசிப்பிடம் கோவில் மேடு, பரமசிவன் கோவில் அருகில்,
செலக்கரிச்சல், சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

5. P. ரங்கநாதன், த/பெ. பழனிச்சாமி, இந்து, வயது 52,
வசிப்பிடம் கோவில் மேடு, பரமசிவன் கோவில் அருகில்,
செலக்கரிச்சல், சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம். ...மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

//எதிர்//

P. செல்வராஜ், த/பெ. பழனிச்சாமி கோனார், இந்து,
வயது 60, வசிப்பிடம் கதவு எண்.5/44, செலக்கரிச்சல் கிராமம்,
கிழக்கு தோட்டம், சூலூர் வட்டம், கோயமுத்தூர். ...எதிர்மனுதாரர் / வாதி

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை நீதிமன்ற ஆணையாளரை நியமித்து அளவீடு செய்தும், எல்லை விபரம் குறித்தும் ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலின் தற்போதைய நிலையையும், காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளது குறித்தும் புகைப்படம் எடுத்து அதனை அறிக்கையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி மனுதாரர்கள்/ பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 01.07.2024
மனுவின் மீது வில்லை : ரூ. 20/-

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முருகேஷ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. நாகராஜன், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவாணையுரை

முடிவாக வழக்கறிஞர் திரு.D.தர்சனா, (M.S.No.7525/2021), அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.15,000/- நியமிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து வாதியின் சொத்தையும் பிரதிவாதிகளின் சொத்தையும் நில அளவையர் உதவியுடன் மனு சொத்துக்களை அளவீடு செய்தும், எல்லை விபரம்

குறித்து தற்போதைய நிலையையும், புகைப்படம் எடுத்தும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த பிறகு அவருக்கு உரிய ஊதியம் வழங்க உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வாய்தா 07.11.2025..

## செலவு தொகை பட்டியல்

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

## சொத்து விபரம்

கோயமுத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், செலக்கரிச்சல் கிராமம், பழைய புல உட்பிரிவு எண்.22/P புதிய புல எண். 583/4 ல் 0.36.6 ஏக்கர் பூமி அதற்குண்டான செக்குபந்தி மற்றும் எல்லை விபரம்:

| | | |
|---|---|---|
| தென்வடல் பஞ்சாயத்து ரோட்டிற்கும் | - | கிழக்கு |
| செல்வராஜ் பூமிக்கும் | - | மேற்கு |
| 583/5, 583/6, 583/7 பூமிக்கும் | - | வடக்கு |
| 583/2 ரங்கநாதன் பூமிக்கும் | - | தெற்கு |

இதன் மத்தியில்,

| | | |
|---|---|---|
| வடபுறம் கிழமேல் | - | 29.4 |
| தென்புறம் கிழமேல் | - | 37 |
| மேல்புறம் தென்வடல் | - | 39.6 + 5.4 = 45.0 |
| கிழபுறம் தென்வடல் | - | 44.4 |

0.36.6 ஏக்கர் பூமி அல்லது 1394.4 சதுர மீட்டர், அதில் அமைந்துள்ள ஸ்ரீ

கானாத்தம்மன் திருக்கோவிலும், அதன் சுற்றுப்புற சுவர் சகிதம்.

2025ம் ஆண்டு அக்டோபர் 7ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Final Order

IA.No.4/2024 in

OS.79/2024 in

Dated:07.10.2025

DMC, Sulur.